**செய்தி வெளியீட்டு எண்.83** **நாள்.07.02.2017**

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ,ஆ,ப., அவர்கள் பார்வையிட்டார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ,ஆ,ப., அவர்கள் இன்று (07.02.2017) பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறியதாவது “ இம்முகாமில் அரசு அலுவலர்கள் உடல் பரிசோதனைகள், இரத்த பரிசோதனை, இரத்த அழுத்தம், ஈ.சி.ஜி, (ECG), எக்கோ (Echo) ஸ்கேன் (Scan), கண், காது, மூக்கு மற்றும் தொண்டைக்கான பரிசோதனையும், பொது மருத்துவத்திற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

மருத்துவ முகாம் இரண்டு நாட்கள் (07.02.2017 மற்றும் 08.02.2017) நடைபெறவுள்ளது. இம்முகாமில் இன்று(07.02.2017) 255 அரசு பணியாளர்கள் பதிவு செய்தனர். இவர்களுக்கு முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சிறப்பு மருத்துவ சிகிச்சைகளுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும். இந்த வாய்ப்பினை அனைவரும் பயன்படுத்திக் கொண்டு பரிசோதனைகளை செய்து கொள்ள வேண்டும்” என்று கூறினார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~